**முதன்மை சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்**

**10.03.2026**

OS. No. 25/2008

பக்கம் – 5

DW1 – சத்தியமூர்த்தி

**வாதிகளின் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

என்னுடைய தந்தை வெங்கடேசன் முதலியார் விவசாயம் செய்து வந்தார். என்னுடைய தந்தை தாவா சொத்தில் விவசாயம் செய்து வந்த போது நான் அவருடன் சேர்ந்து விவசாயம் செய்ய உதவி புரிந்து வந்தேனா அல்லது வேறு ஏதாவது பணிபுரிந்து வந்தேனா என்றால் எனக்கு தெரியாது. என்னுடைய தாத்தாவிற்கு பெண் வாரிசுகளாக அம்சா, ராம்பாய், ஆண்டாள், தனலட்சுமி மற்றும் ஜெயலட்சுமி ஆகியோர் உள்ளனர் என்றால் சரிதான். மேற்சொன்ன பெண்களுக்கு 1960 க்கு முன்னரே திருமணம் ஆகிவிட்டது என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. என்னுடைய சகோதரிகள் சாந்தி மற்றும் லட்சுமிபாய் ஆகியோர்களுக்கு முன்னரே என்னுடைய தாத்தாவின் பெண் குழந்தைகளுக்கு திருமணம் ஆகிவிட்டது என்றால் அதுவும் எனக்கு தெரியாது. பி.வா.சா.ஆ.1 பாகப்பிரிவினை பத்திரம் ஏற்படுத்தப்பட்டபோது என்னுடைய அத்தைகளுக்கு ஆண் வாரிசுகள் இருந்தனர் என்றால் சரிதான். என்னுடைய சித்தப்பா கோபால் இருக்க இரண்டு ஆண் வாரிசுகள் உள்ளன. அவர்களின் பெயர்கள் பாஸ்கரன் மற்றும் மகேஷ் ஆகும். பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் என்னுடைய சித்தப்பாவின் மகன்கள் ஒரு தரப்பினர்களாக உள்ளன என்றால் இல்லை. அவர்களை ஏன் ஒரு தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. நான் ராமசாமி முதலியாரின் பேரன் என்ற அடிப்படையில் பி.வா.சா.ஆ.1 பாகப்பிரிவினை பத்திரத்தில் நான் ஒரு தரப்பினராக உள்ள பட்சத்தில் ராமசாமி முதலியாரின் மற்றொரு ஆண் வாரிசான கோபாலின் வாரிசுகளை அந்த ஆவணத்தில் ஒரு தரப்பினர்களாக ஏன் சேர்க்கவில்லை என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. பி.வா.சா.ஆ.1 பாகப்பிரிவினை பத்திரம் ராமசாமி முதலியாரின் வாரிசுகள் எட்டு நபர்களுக்கு இடையில்தான் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான். நான் என்னுடைய தந்தை உயிருடன் இல்லாத காரணத்தினால் அந்த

ஆவணத்தில் ஒரு தரப்பினராக சேர்க்கப்பட்டுள்ளேன் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. நான் அந்த பாகப்பிரிவினை பத்திரத்தில் ராமசாமி முதலியாரின் பேரன் என்ற அடிப்படையில் தான் சேர்க்கப்பட்டேன். என்னுடைய தந்தை உயிருடன் இல்லாத காரணத்தினால் அவரது சார்பாக தான் நான் ஒரு தரப்பினராக அவருக்காக வேண்டி சேர்க்கப்பட்டுள்ளேன் என்றால் சரிதான். என்னுடைய தந்தை காலமான போது அவருடைய நேரடி நேரடி வாரிசுகளாக நான், என்னுடைய தாயார் மங்கையர்கரசி, ஒன்றாம் பிரதிவாதி சாந்தி மற்றும் வாதிகளின் தாயார் விஜயகுமாரி ஆகிய நால்வர் என்றால் சரியல்ல. என்னுடைய தாயார் ஒரு வாரிசு கிடையாது. என்னுடைய தந்தைக்கு நான், வாதிகளின் தாயார் விஜயகுமாரி மற்றும் ஒன்றாம் பிரதிவாதி சாந்தி ஆகியோர்களை தவிர வேறு வாரிசுகள் கிடையாது என்றால் சரிதான். என்னுடைய தந்தை வெங்கடேசன் முதலியார் கிரயம் பெற்ற சொத்துக்களுக்கும் எனக்கும் என்னுடைய தந்தையின் இதர மூன்று வாரிசுகளுக்கும் இடையே எவ்வித பாகப்பிரிவினையும் ஏற்படுத்தப்படவில்லை என்றால் சரிதான். வாதிகளின் தாயார் விஜயகுமாரி மற்றும் ஒன்றாம் பிரதிவாதி சாந்திக்கு அவ ர்ின் திருமணத்தின் போது அதிக சீர்வரிசை பொருட்கள் கொடுத்தது காரணமாக பி.வா.சா.ஆ.1 பாகப்பிரிவினை பத்திரத்தில் தாவா அ பட்டிகை சொத்து எனக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது தொடர்பாக வாதிகளின் தாயாருதம் ஒன்றாம் பிரதிபாதியும் சம்மதம் தெரிவித்ததாக நான் சொல்லியுள்ளதற்கு ஏதாவது ஆதாரம் உள்ளதா என்றால் இல்லை. பி.வா.சா.ஆ.1 ஆவணம் மூலம் பாகப்பிரிவினை பத்திரம் ஏற்படுத்தப்பட்ட விபரம் வாதிகளின் தாயாருக்கும் ஒன்றாம் பிரதிவாதிக்கும் தெரிய வந்ததாக நான் சொல்லி உள்ளது தொடர்பாக ஏதாவது ஆதாரத் இந்த வழக்கில் தாக்கல் செய்து உள்ளேன் என்றால் இல்லை. வாதிகளின் தாயார் விஜயகுமாரி பி.வா.சா.ஆ.1 பாகப்பிரிவினை பத்திரப்படி தாவா அ ஐட்ட சொத்தை எனக்கு பாகப்பிரிவினை ஒதுக்க ஏதாவது ஆவணம் எழுதி கொடுத்து உள்ளாரா என்றால் இல்லை. பி.வா.சா.ஆ.1 ஆவணம் அடிப்படையில் தாவா சொத்து என்னுடைய

அனுபவத்தில் இருந்து வருவது தொடர்பாக நான் இந்த வழக்கில் விளம்புகைப் பரிகாரம் எதுவும் Adverse Possession தொடர்பாக கோரியுள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்தின் ஒரு பகுதியை நான் 6 முதல் 9 பிரதிவாதிகளுக்கு கிரையம் செய்து கொடுத்த போது வாதிகளிடம் ஏதாவது ஒப்புதல் பெற்றுள்ளேனா என்றால் இல்லை. 6 முதல் 9 பிரதிவாதிகளுக்கு நான் தாவா சொத்தின் ஒரு பகுதி கிரையம் செய்து கொடுத்த விபரம் வாதிகளுக்கு 2008 ஆம் ஆண்டிற்கு முன்னரே தெரியும். 6 முதல் 9 பிரதிவாதிகளை கிரைய ஆவணத்தில் வாதிகள் ஒரு தரப்பினர்களாகவோ அல்லது சாட்சி கையெழுத்தோ செய்யவில்லை என்றால் சரிதான். 2007 ஆம் ஆண்டு வாலாஜாபாத் காவல் நிலையத்தில் வாதிகள் அவர்களின் சம்மதம் இல்லாமல் அவர்களுக்கு தெரியாமலும் தாவா சொத்தின் ஒரு பகுதியை 6 முதல் 9 பிரதிவாதிகளுக்கு கிரயம் செய்து கொடுத்தது தொடர்பாக புகார் கொடுத்திருந்தனர் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. இந்த விபரம் எனக்கு தெரியும் வேண்டும் இது குறித்த விபரத்தை வாதிகள் பிராதின் எட்டாவது பகுதியில் முதல் தகவல் அறிக்கை 405/2007 என்பது குறித்து குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த விபரம் எனக்கு தெரிந்தும் நான் தெரியாது என்று வழக்குக்காக வேண்டி பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 6 முதல் 9 பிரதிவாதிகளுக்கு நான் ஏற்படுத்திக் கொடுத்த கிரைய பத்திரத்தில் வாதிகள் ஒரு தரப்பினர்கள் அல்ல என்ற காரணத்தினால் அது வாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. வாதிகள் தாவாசத்தின் கூட்டு அனுபவத்தில் இல்லை என்பது குறித்து என்னுடைய எதிருரையிலும் முதல் விசாரணையிலும் நான் குறிப்பிட்ட சொல்லவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய தந்தை உயிருடன் இருக்கும் பொழுதே அவருடைய உடன் பிறந்தவர்கள் வாய்மொழி பாகப்பிரிவினையாக தாவா சொத்துக்களை என்னுடைய தந்தைக்கு ஒதுக்கிவிட்டார்கள் என்றும் இதனை 1983 ஆம் ஆண்டு ஆவணம் அவ்வாறு ஒதுக்கப்படாதபோல் என்னுடைய பெயருக்கு பாகப்பிரிவினைப் பத்திரம் ஏற்படுத்திக் கொண்டேன்

என்றும் இந்த ஆவணம் குறித்து வாதிகளுக்கும் அவர்களுடைய தாயாருக்கும் எவ்வித அறிவிப்பும் கிடையாது என்றால் சரியல்ல. என்னுடைய முதல் விசாரணையிலோ எதிருரையிலோ வாதிகளுக்கும் தாவா சொத்தில் எவ்வித உரிமையும் இல்லை என்று நான் மறுத்து சொல்லவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய தந்தையான வெங்கடேசன் முதலியாருக்கு பாத்தியப்பட்டது தான் என்றும் அதன் அடிப்படையில் வாதிகளின் தாயாருக்கு சொத்தில் மூன்றில் ஒரு பங்கு பாத்தியப்பட்டது என்றும் அவருடைய காலத்திற்கு பின்னர் அவர்களுடைய தாயாருக்கு பாத்தியப்பட்ட மூன்றில் ஒரு பங்கு சொத்து வாதிக்களுக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல. வாதிகளுக்கு தாவா சொத்தில் எந்த ஒரு பாகமும் கொடுக்கக் கூடாது என்ற நோக்கத்தில் நான் 6 முதல் 9 பிரதிவாதிகளுக்கு பெயரளவில் தான் ஆவணத்தை ஏற்படுத்திக் கொடுத்துள்ளேன் என்றும் தாவா சொத்தின் சுவாதீனத்தில் இதுநாள் வரையிலும் நானும் வாதிகளும் தான் இருந்து வருகின்றோம் என்றால் சரியல்ல. அதனால் வாதிகள் கோரியபடி இந்த வழக்கு அனுமதிக்கப்பட வேண்டியது என்றால் சரியல்ல.

<u>6, 7 மற்றும் 9 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

பி.வா.சா.ஆ.1 ஆவணத்தின் அடிப்படையில் நான் பதிவு செய்யப்பட்ட பிரிவினையை ஏற்படுத்தியுள்ளேன் என்றால் சரிதான். அந்த ஆவணத்திற்கு பிறகு தாவா சொத்துக்களை நான் தான் பயிர் வைத்து என்னுடைய அனுபவத்தில் வைத்து வந்தேன். 1983 ஆம் ஆண்டு பி.வா.சா.ஆ.1 ஆவணத்தை ஏற்படுத்தி பின்னர் 2006 ஆம் ஆண்டு ஆறாம் பிரதிவாதிக்கு தாவா சொத்தை நான் விற்பனை செய்த போது சுமார் 23 வருட காலம் தாவா சொத்து என்னுடைய அனுபவத்தில் தான் இருந்து வந்தது. அதன்பிறகு தான் அதனை நான் ஆறாம் பிரதிவாதிக்கு விற்பனை செய்தேன் என்றால் சரிதான். ஆறாம் பிரதிவாதிக்கு கிரையம் செய்து கொடுத்த இடத்திற்கான முழு கிரைய தொகையும் நான் பெற்றுக் கொண்டேன். கிரையம் பணத்தை ஆறாம் பிரதிவாதி

கொடுத்தாரா என்றால் தரகர் மூலமாக தான் கொடுத்தார். கிரைய பணத்தை நான் பெற்ற போது வாதிகளும் அவர்களுடைய தந்தையும் உடனிருந்தார்களா இருந்தால் இல்லை. தாவா சொத்தின் ஒரு பகுதியை ஆறாம் பிரதிபாதிக்கு நான் கிரையம் செய்து கொடுத்த மறுநாள் தான் வாதிகளின் தந்தைக்கு தெரியும். நான் கிரையம் செய்து கொடுத்த இடத்தை இடத்திற்கான சுவாதீனத்தை 6 முதல் 9 பிரதிவாதிகளிடம் ஒப்படைத்து விட்டேனா என்ன ஒப்படைத்து விட்டேன். 6 முதல் 9 பிரதிவாதிகள் தாவா சொத்தின் ஒரு பகுதியை கிரயம் பெற்றது செல்லும் என்றால் சரிதான்.

**வாதிகளின் தரப்பில் மறு குறுக்கு விசாரணை**

2006 ஆம் ஆண்டு 6 முதல் 9 பிரதிவாதிகளுக்கு தாவாசொத்தின் ஒரு பகுதியை நான் கிரயம் செய்து கொடுத்த மறுநாள் இந்த விபரம் வாதிகளின் தந்தைக்கு தெரிய வந்ததாக என்னுடைய முதல் விசாரணையிலும் எதிர்ரையிலும் நான் குறிப்பிட்டு சொல்லி உள்ளேன் என்றால் இல்லை.

**(மறு விசாரணை இல்லை)**

Sd/– K.S.அருண் சபாபதி,
முதன்மை சார்பு நீதிபதி,
காஞ்சிபுரம்